நம்பிக்கையுடன் சேமிக்க
'ஷப்ரு'வின்
துணையை நாடுங்கள்
SHABRA
207, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2 2073

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/=

நிதித்துறையில்
நாணயம் மிக்க
நண்பன்
SHABRA
61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு-4.
தொலைபேசி: 589810-500576

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஸ்ரீ கார்த்திகை மீ 28 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ற. அவ்வல் பிறை 30 (13 12 1985) UTHAYAN — A LIVELY TAMIL DAILY கதிர்:-17

★ 2 மணிநேரமாக மக்கள் நடுக்கம்

# துப்பாக்கிச் சூடு; குண்டு வெடிப்பு

# யாழ்ப்பாணம் நேற்று அதிர்ந்தது

## இராணுவம் திடீர் பாய்ச்சல்; பெரியகடையில் இருவர் பலி; பெருமாள்கோவில்பகுதி முற்றுகை

— அலுவலகச் செய்தியாளர்: வளிராஜ் —

யாழ்ப்பாணம், டிச. 13

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இராணுவத்தினர் நேற்று நண்பகல் யாழ்ப்பாண நகரில் திடீர் பாய்ச்சல் நடத்தினர்.

அதனையொட்டி 2 மணி நேரமாக நகரம் நடுங்கியது. துப்பாக்கிச் சூடும், குண்டு வெடிப்பும் மக்களைக் கலக்கின.

பெருமாள் கோவில் பகுதியை முற்றுகையிட்ட இராணுவத்தினர், கே. கே. எஸ். வீதி வழியே திரும்பிப் போகும்போது சரமாரியாகக் குண்டுகளைத் தீர்த்தனர்.

அதனைத் தொடர்ந்து பெரியகடை — பஸ் நிலையப் பகுதியில் இருவர் பலியாகினர். அவர்களில் ஒருவர் 79 வயதான பென்ஷனியர். மற்றவர் 59 வயதுக் காரர்.

நேற்று நண்பகல் சுமார் 12-15 மணியளவில் ஐந்து கவச வாகனங்களிலும் ஒரு வெள்ளை நிற வானிலும் ஆயுதப் படையினர் கோட்டை முகாமில் இருந்து புறப்பட்டு மின்சார நிலைய வீதியால் வண்ணை வெங்கடேசப் பெருமாள் ஆலயத்தின் முன்னால் வந்து நின்றனர்.

மணிக்கூண்டு கோபுர வீதி, நாவலர் வீதி, கன்னாதிட்டி வீதிகளை ஆயுதப் படையினர் தடை செய்தனர்.

இதன்பின்னர் மணிக்கூண்டு கோபுர வீதியில் உள்ள ஒரு இல்லத்தை சோதனையிட்டனர்.

அந்த வீடு, பாடசாலைக்கு எதிரே இருக்கின்றது. அருகில் இருந்த பல வீடுகளும் சோதனை இடப்பட்டன. ஆலய மண்டபமும் சோதனை இடப்பட்டது. அச்சமயத்தில் அந்த வீதியில் ஒரு மூடை மாவை சைக்கிளில் ஒருவர் ஏற்றிக் கொண்டு வந்தார். அந்த மூடை மா வீதியில் கொட்டப்பட்டு பின்னர் பரவப்பட்டது.

சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை ஆயுதப் படையினர் ஆலயத்தின் முன்னே நின்றனர்.

அப்பொழுது ஒரு பக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கனடா விமான விபத்து
## 250 இராணுவ வீரர்கள் பலி!

ரொறண்டோ, டிச. 13

கனடாவில் நேற்று இடம்பெற்ற மிகப் பெரிய விமான விபத்து ஒன்றில் 258 பேர் கூண்டோடு மடிந்தார்கள்.

இவர்களில் 250 பேர் அமெரிக்க இராணுவ வீரர்கள். இறந்த மற்ற எட்டுப்பேரும் விமான சிப்பந்திகள்.

இறந்த இராணுவ வீரர்கள் சினாய் பகுதியில் சர்வதேச சமாதானப் படையில் கடமையாற்றியவர்கள். கிறிஸ்மஸ் விடுதலைக்காக நாடு திரும்பும்போது நடுவழியில் உயிரிழந்தார்கள்.

இவர்களுக்காக பிரத்தியேகமாக டி.வி 8 விமானம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நேற்று ரொறண்டோ விமானநிலையத்தைவிட்டு விமானம் புறப்பட்டது. விமானம் தரையைவிட்டு கிளம்பிய வேளையில் நடுவானில் திடீரென வெடித்துச் சிதறியது.

விமானத்தில் பயணம் செய்த எவரும் விபத்திலிருந்து தப்பிப் பிழைத்திருக்கமாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

## சிறுமி உட்பட நால்வர் விடுதலை

கிளிநொச்சி, டிச 13

கிளிநொச்சி பழைய பஸ் நிலையத்தில் மினிதியேட்டரில் படம் பார்த்துக் கொண்டிருக்கையில் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட நால்வர் விடுதலை செய்யப்பட்டனர்.

ஏனையோர் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

விடுதலை செய்யப்பட்டவர்களில் 11 வயது சிறுமி ஒருவரும் அடங்கி உள்ளார் எனத் தெரிய வந்துள்ளது.

## இன்டர்சிற்றியில் குண்டு வெடித்தது
### ரயிலுக்குச் சேதம்

கொழும்பு டிச. 13

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வந்து சேர்ந்த இன்டர் சிற்றி ரயிலில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்தது. எனினும் எவருக்கும் காயம் இல்லை. ரயில் பெட்டிக்கு மட்டும் சிறிது சேதம்.

நேற்றுக்காலை யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட இந்த ரயில் நண்பகல் 1-05 அளவில் கோட்டை ரயில் நிலையத்தை வந்தடைந்தது.

பிரயாணிகள் அனைவரும் இறங்கிய பின்னர் மருதானை ரயில்வே யார்ட்டிற்கு ரயில் கொண்டு செல்லப்பட்டது.

ரயில் யார்ட்டிற்குள் நுழைவதற்கு ஆயத்தமானபோது என்ஜினிலிருந்து நான்காவது பெட்டியில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்தது. அப்போது நேரம் 2 மணி.

அந்த பெட்டியின் கீழ் பகுதிக்கு பலத்த சேதம். ஆனால் எவருக்கும் காயம் இல்லை.

வெடித்த குண்டு அதி சக்தி வாய்ந்த ஒன்றல்ல என்றும் —

குண்டு வெடிப்பு தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## போராளிகள் மூவர் அரியாலையில் மரணம்

யாழ்ப்பாணம், டிச. 13

புதன்கிழமை இரவு அரியாலையில் நடந்த சம்பவம் ஒன்றில் தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தைச் சேர்ந்த மூன்று பேர் கொல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணம் நகரில் நேற்று ஒட்டப்பட்ட சுவரொட்டியில் இது பற்றிக் கூறப்பட்டுள்ளது.

கொக்குவிலைச் சேர்ந்த ரவிமூர்த்தி, அரியாலையைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன், கைதடியைச் சேர்ந்த பண்டா ஆகியோரே இறந்தவர்கள் என்றும் சுவரொட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சுபநேரம்

13 - 12 - 1985

வெள்ளிக்கிழமை

சுபநேரம்:
6.–21முதல் 7.–51 வரை

ராகுகாலம்:
10. 51 முதல் 12.–21 வரை

## ஆசிரியர் முற்பணம்
## ரூ. 500 ஆக அதிகரிப்பு

நல்லூர், டிச. 13

ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் விசேஷ முற்பணம் 1986 இல் இருந்து 500 ரூபா ஆக அதிகரிக்கப்பட்டு உள்ளது.

வட்டியுடன் இப்பணம் பத்து மாதங்களில் திருப்பிச் செலுத்தப்படவேண்டும்.

இதுவரை 300ரூபாவே விசேஷ முற் பணமாக வழங்கப்பட்டு வந்தது.

## நுவரெலியாவில் தேடுதல் வேட்டை

நுவரெலியா, டிச. 13

நுவரெலியாவில் பல இடங்களில் நேற்று ஆயுதப் படையினர் தேடுதல் வேட்டைகளை நடத்தினார்கள்.

பல இடங்களில் வீதித் தடைகள் போடப்பட்டிருந்தன.

நேற்றுக் காலைமுதல் மாலைவரை இத்தேடுதல் நீடித்தது. பலபேரை படையினர் விசாரணைக்குக் கொண்டுசென்றதாக தெரியவருகிறது.

# அரசாங்கம்-கூட்டணி நேரடிப் பேச்சு

## இந்தியா ஏற்பாடு செய்கிறது

புதுடில்லி, டிச. 12

இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் நேரடிப் பேச்சுவார்த்தை நடைபெறும்.

இதற்கான நடைமுறைச் சாத்தியமான ஏற்பாடுகளை இந்திய மத்திய அரசு இப்போது செய்துவருகிறது.

இலங்கை அரசாங்கத்தின் சார்பில் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தலைமையிலான குழு தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

ஈழம் தேசிய விடுதலை முன்னணி தமிழ் ஈழத்திற்கு குறைந்த எந்த தீர்வுக்கும் சம்மதிப்பதாயில்லை. பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவும் வழி பிறப்பதாயில்லை.

ஆகவே தமிழர் விடுதலைக் கூட்டணி மூலமாக வேனும் பேச்சுவார்த்தை நடத்தி தமிழர்களுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக் கொடுக்க இந்தியா விரும்புகிறது.

இனப் பிரச்சினைத் தீர்வுக்கு தமிழர் விடுதலைக்கூட்டணி சமர்ப்பித்த யோசனைகள் நியாயபூர்வமானவை. அவற்றைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். இப்படி மத்திய அரசின் உயர் பீடம் கருதுவதாகத் தெரிகிறது.

### முச்சந்தி முரளி



யாழ்ப்பாணத்திலையிருந்து போன இன்டர்சிற்றியிலை குண்டு இருந்ததாம் எண்டு கேள்வி.

உந்தக் கேள்விக்குப் பதில் இன்னும் கொஞ்ச நாளிலை ரயில் ஓட்டம் நிற்கிறதுதானோ யாருக்குத் தெரியும்!

## அவர்கள் பார்வையில் சிறுவரும் போராளிகள்!

திருகோணமலை, டிச. 13

ஊர்காவல் படையினர் போராளிகள் என்று சுட்டதில் ஒரு சிறுவனும் ஒரு சிறுமியும் காயம் அடைந்தனர்.

இது பற்றிக் கூறப்படுவதாவது: அன்புவழிபுரம் தமிழர் வாழும் பகுதி. அருகில் உள்ளது அபயபுர. இது சிங்களவர் வாழும் பகுதி

செவ்வாய்க்கிழமை பிற்பகல் அபயபுரப் பகுதியில் உள்ள ஊர்காவல் படைவீரர்கள் திடீரென்று சுட்டனர்.

போராளிகள் சுட்டார்கள் நாங்கள் திருப்பிச் சுட்டோம் என்று ஊர்காவல் படையினர் தெரிவித்தனர்.

ஆனால் அன்புவழிபுரம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உருத்திரபுரம் சம்பவம்:
# வயல்களில் எட்டுச் சடலங்கள்

## 25 பேருக்கு துப்பாக்கிச் சூட்டுக் காயம்
### இராணுவம் நடைபவனியாக கிளிநொச்சி திரும்பியது

கிளிநொச்சி, டிச. 13

கிளிநொச்சி உருத்திரபுரத்தில் தேடுதல்நடத்த செவ்வாய்க்கிழமை நண்பகல்சென்ற இராணுத்தினர் புதன்கிழமை மாலை நடைபவனியாக கிளிநொச்சி திரும்பினர்.

கண்ணி வெடியின்போது புரண்ட கவசவாகனமும் இவர்களால் மீட்டுக் கொண்டுவரப்பட்டது.

கவசவாகனத்தை மீட்கும்வரை உருத்திரபுரம்–கிளிநொச்சி போக்குவரத்து துண்டிக்கப்பட்டிருந்தது. இராணுவம் முகாமுக்கு திரும்பிய பின்னர் எட்டுச் சடலங்கள் வயல்களில் இருந்து மீட்கப்பட்டன.

பெரியண்ணன் பழனிச்சாமி, அ. மனோகரராசா, இரத்தினம் ஆகியோரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

25க்கு மேற்பட்டவர்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பல மக்கள் வீடு வாசல்களை இழந்து அழுது புலம்பிய வண்ணம் காணப்படுகின்றனர். உருத்திரபுரம் பகுதி மயானம் போன்று காட்சியளிக்கின்றது.

அச்சம் காரணமாக காடுகளில் தஞ்சம் அடைந்தவர்கள் இரண்டு நாள் பட்டினியுடன் புதன் மாலை வீடு திரும்பினர்.

## மலையகத்தில் ஒரு வாரத்தில் மூன்று கொள்ளைச் சம்பவங்கள்

மலையகத்தில் தமிழர்களுக்கு எதிரான ஒரு இயக்கம் உருவாகி வருகின்றதா?

மலையகத்தில் அடிக்கடி இடம் பெறும் கொள்ளைச் சம்பவங்களைத் தொடர்ந்து தோட்டப் பகுதி மக்களிடையே இப்படி ஒரு சந்தேகம் எழுந்துள்ளது.

கடந்த ஒரு வாரத்தில் மலையகத்தில் மூன்று கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றன.

தோட்டத் தொழிலாளருக்கான சம்பளப் பணமே இம் மூன்று சம்பவங்களிலும் கொள்ளை இடப்பட்டன.

சில தினங்களுக்கு முன்னர் இறக்குவானைத் தோட்டத்தில் முதல் கொள்ளை இடம் பெற்றது. தோட்டத்துரை தொழிலாளருக்கான சம்பளப்பணத்துடன் வந்து இறங்கிய பொழுது, இனந்தெரியாத கோஷ்டி ஒன்று சம்பளப்பணம் இருந்த பையைப் பிடுங்கி எடுத்துக் கொண்டு மறைந்தது.

இரண்டாவது சம்பவம் தெரணியகலையில் உடபாகே தோட்டத்தில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தை கண்டிக்கிறார் முன்னாள் தூதுவர் ஏபிரஹாம்

சென்னை, டிச. 12

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளியினரின் பிரச்சினைபற்றி தமிழகம் சிந்திப்பதில்லை. தமிழக அரசியல் தலைவர்கள் இதைக் கண்டிக்க வேண்டும்.

இந்தியாவின் இலங்கைக்கான முன்னாள் தூதுவர் திரு. தோமஸ் ஏபிரஹாம்தான் இப்படிக் கூறியவர்.

இலங்கையில் பெரும் எண்ணிக்கையான நாடற்ற பிரஜைகள் இருக்கிறார்கள். இவர்கள் இந்திய வம்சாவளியினர். தமிழ் நாட்டின் மாவட்டங்களில் இருந்து அங்கு சென்றவர்களின் வழித் தோன்றல்கள் இவர்கள்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை இந்திய வம்சாவளியினரின் பிரச்சினையை மறைத்துவிட்டது.

இலங்கையின் பிரிவினையை ஆதரிப்பதில்லை என்று இந்தியா உறுதியளிக்க வேண்டும்.

திரு. தோமஸ் ஏபிரஹாம் சென்னையில் நடைபெற்ற ரோட்டறி சமூக கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே இப்படிக் கூறினார்.

## 14, 15 இல் ஓய்வூதியம் இல்லை

யாழ்ப்பாணம், டிச. 13

யாழ்ப்பாணம் செயலகத்தில் உள்ள இலங்கை வங்கிக் கிளையில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு யாழ். கோட்டைக்குள் உள்ள இலங்கை வங்கிக் கிளையினால் இம் மாதம் 14 ஆம் 15 ஆம் திகதிகளில் ஓய்வூதியம் வழங்கப்படுவதாக இருந்தது.

தவிர்க்கமுடியாத காரணங்களினால், அத் தினங்களில் ஓய்வூதியம் வழங்கப்படுவது ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்று யாழ். செயலக பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. த. குலசேகரம் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## "சின்ன வீடு" கல்பனா மனம் திறந்து பேசுகிறார்

"சின்ன வீடு படத்தின் மூலம் தமிழ்ப் படவுலகிற்கு அறிமுகமாகியவர் கல்பனா. இவர் நடிகை ஊர்வசியின் சகோதரி. ஏற்கனவே மலையாளப் படங்களில் இவர் நடித்துள்ளார்.

"சின்ன வீடு படஅனுபவங்களைப் பற்றி மனம் திறந்து இங்கு கூறுகிறார் கல்பனா:

"சின்ன வீடு" படத்தில் நடிப்பதற்காக இயக்குநர் பாக்கியராஜ் அழைத்தார். என்னைப் பார்த்தவுடன் "என்னோட படத்துல நடிக்கிறதுக்கு ஒரு குண்டுப் பொண்ணு தேவை. அப்போ உன் ஞாபகம் தான் வந்தது. இன்னும் நீ குண்டாகணும்" என்றார்.

அன்றிலிருந்து பால், தயிர், பழம் இனிப்பு வகைகள் — இப்படி பருமனாவதற்குத் தேவையான அத்தனையையும் சாப்பிட ஆரம்பித்தேன்.

காலையில் எழுந்தவுடன் பழஞ் சோறுசாப்பிடும்படி பாக்கியராஜ் சொன்னார். அதையும் செய்தேன்.

நடிப்பைப் பொறுத்தவரை அவர் சொல்லிக் கொடுப்பதை அப்படியே நடித்தாலே போதுமானது. குறிப்பாக ஒரு பிரசவ காட்சியில் எப்படி நடிக்க வேண்டும் எனச் சொல்லிக் கொடுத்தார். நான் அசந்து போய் விட்டேன்.

சின்னஞ்சிறு விஷயங்களைக் கூட மிக முழுமையாக் கவனத்தில் கொண்டு, மிகச் சிறப்பாகச் செய்து காட்டும் அவருடைய திறமையை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும்.

இந்தப் படத்தைப் பொறுத்தவரை இயக்குநர் பாக்கியராஜிடம் நான் திட்டே வாங்கவில்லை, ஒரே ஒரு இடத்தைத் தவிர. அது அந்த பிரசவ காட்சிதான்.

அன்று அழுதபடியே வீட்டுக்குச் சென்றேன். அம்மா என்னைப் பார்த்து "பள்ளியில் வாத்தியார் அடித்தால் பிள்ளைகள் வீட்டில் வந்தா சொல்கிறார்கள். அது போலத்தான் பாக்கியராஜிடம் நடிப்பைக் கற்றுக் கொள்ள அனுப்பியுள்ளோம். முழுமையாகக் கற்றுக் கொள்" என்றார்.

அதைக் கடைப்பிடிப்பதுதான் இன்று என்னுடைய கடமை" என்றார்.

## நிக்கரகுவாவுடனை ராஜீய உறவுகளை தைவான் துண்டித்தது

தைபெய், டிச. 12

தைவானின் தேசிய சீன அரசு நிக்கரகுவாவுடன் உள்ள தனது இராஜதந்திரத் தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டது.

சீனவுடன் புதிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள நிக்கரகுவா தீர்மானித்துள்ளதைத் தொடர்ந்தே தைவான் இந்த நடவடிக்கையை மேற்கொண்டது.

"சினேகவிரோத நடவடிக்கை' என தைவான் இதைக் கண்டித்துள்ளது. தனது தூதராலய அதிகாரிகளையும் மற்றும் விவசாயத்தொழில் நுட்பக்குழுவையும் அங்கிருந்துதிருப்பி அழைத்தும் விட்டது.

நிக்கரகுவாவுக்கும் சீனவுக்கும் இடையே பூர்வாங்கத் தொடர்புகளை ஏற்படுத்தும் கூட்டறிக்கையொன்று அண்மையில் பீக்கிங்கில் கையெழுத்தாகியது.

## ஆசிரியர் சேவைப் புத்தகம் நிரப்புதல் அவசியம்

வட்டுக்கோட்டை, டிச 13

ஆசிரியர் சேவைப் பதிவுப் புத்தகம் நிரப்புதல் சம்பந்தமான இரண்டாவது சுற்று நிருபமொன்று யாழ் கல்வித் திணைக்கள நிர்வாக அதிகாரியினால் யாழ் மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைத் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இச்சுற்று நிருபத்தில் 1970 – 4 – 01ஆம் திகதி தொடக்கம் இன்று வரையிலான சேவை விபரத்தை ஒவ்வொரு ஆசிரியரும் கட்டாயமாக தங்கள் சேவைப் பதிவுப் புத்தகத்தில் நிரப்புதல் வேண்டுமென்றும் 1970–04 – 01ல் இருந்து ஏற்பட்ட சகல மாற்றங்களும் தவறாது குறிப்பிடப்படுதல் வேண்டுமென்றும் கேட்கப்பட்டுள்ளது.

இடமாற்றம், சம்பள உயர்ச்சி இடை நிறுத்தம் பின்போடல், சம்பள மாற்றம், வினைத்திறமை காண்தடைமேல்உயர்ச்சி, அதன் காரணமாக சம்பள உயர்ச்சி பின்போடல், சேவையிலிருந்து இடை நிறுத்தம், தண்டனைகள், சேவை நீடிப்பு ஆகியவை கட்டாயமாகப் பதிவு செய்தல் வேண்டுமெனவும் மேலும் கேட்கப்பட்டுள்ளது.

### துப்பாக்கி உற்பத்தி

பொத்துவில், டிச. 13

பொத்துவிலுக்கு அண்மையில் திம்புலாகலை எனும் இடத்தில் துப்பாக்கி பட்டறை ஒன்றை பாதுகாப்புப் படையினர் நேற்று முன்தினம் கண்டு பிடித்தனர். ஐந்து பேர் கைது செய்யப்பட்டார்கள்.

கைது செய்யப்பட்ட ஐவரும் தமிழர்கள் என்று கூறப்படுகிறது.

## சுன்னுகம் இணக்க சபை சாதனை

சுன்னுகம், டிச.13

நீதிமன்றங்களில் பல வருடங்கள் விசாரிக்கப்பட்டும் தீர்வுக்கு வராத பல பிரச்சினைகளை சுன்னுகம் இணக்கசபை தீர்த்து வைத்துள்ளது.

இதனைப் பாராட்டி இணக்க சபைக்கு பலசன சமூக நிலையங்களும் பொது ஸ்தாபனங்களும் கடிதங்களை அனுப்பியுள்ளன.

திரு.எஸ்.வி.வடிவேலுவின் தலைமையில் இந்த இணக்க சபை இயங்குகிறது.

திரு. எஸ். வி. வடிவேலு தலைவர் இணக்க சபை, சுன்னுகம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டிருக்கிறது.

சோவியத் அமெரிக்க

# வர்த்தகப் பேச்சுகள் விஸ்தரிக்கப்படும்

## இருநாட்டு வர்த்தகப் பிரதிநிதிகளும் கூட்டாக அறிக்கை

மாஸ்கோ, டிச. 12

சோவியத்யூனியனும் அமெரிக்காவும் வர்த்தகப் பேச்சுக்களை விஸ்தரிக்க உறுதி பூண்டுள்ளன.

மாஸ்கோ சென்றுள்ள அமெரிக்க பொருளாதார வர்த்தகப் பிரதிநிதிகளுடன் சோவியத் அதிகாரிகள் பேச்சுவார்த்தை மேற்கொண்டனர். மூன்று நாட்கள் நடந்த மாநாட்டின் பின் வெளியிட்ட கூட்டறிக்கையிலேயே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

இரு நாடுகளுக்கிடையிலான பொருளாதாரத் தொடர்பு வளரவேண்டும். அது இரண்டு முன்னணி வல்லரசுகளின் ஆற்றல் அளவுக்கு வளர வேண்டும் என்று அந்த அறிக்கையில் விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சோவியத்யூனியனுக்கு மிகவும் வேண்டிய நாடு என்றவகையில் சலுகை அளிப்பதற்கும் அந் நாட்டுக்கு ஏற்றுமதிக்கடன்களை விஸ்தரிக்கவும் கூட்டறிக்கை வசதியளிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் இந்த இரண்டு பிரச்சினைகள் பற்றியும் இப்போதுள்ள கட்டுப்படுத்தும் சட்டத்தை அமெரிக்க பாராளுமன்றம் திருத்தும் வாய்ப்பு இல்லையென குழுவுக்குத் தலைமை வகித்துச் சென்றுள்ள அமெரிக்க வர்த்தக மந்திரி திரு. கால்றிட்ஜ் கூறினார்.

## காளையுடன் மோதிய நபர் வாளால் அதனை குத்திக் கொன்றார்

லிஸ்பன், டிச. 12

காளையுடன் மோதுவது போர்த்துக்கல் நாட்டில் பிரசித்தி பெற்ற ஒரு விளையாட்டு.

இப்படி நடந்த மோதலில் 48 வயதான கோயெல்ஹோ என்பவர் வாளினால் காளையைக் குத்திக் கொலை செய்து விட்டார்.

மோதல் நடந்த அரங்கில் வைத்தே காளை கொல்லப்பட்டது.

அதற்காக நீதிமன்றத்தில் அவர் குற்றஞ்சாட்டப்பட்டார்.

விசாரணை முடிவில் ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறைத் தண்டனையும் 377 டாலர்கள் அபராதமும் விதிக்கப்பட்டன.

"நான் இதுவரை 700 காளைகளைக் கொலை செய்துள்ளேன்" இப்படி கோயெல்ஹோ சொன்னார்.

விளையாட்டு அரங்கில் வைத்து காளைகளைக் கொல்வது 1938இல் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டுள்ளது.

### டில்லியில் சீக்கியர் ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, டிச. 12

புதுடில்லியில் உள்ள பங்களாதேஷ் தூதரகத்தின் முன்னல் சீக்கியர் குழு ஒன்று அமைதியான ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டது.

டாக்கா உச்சி மாநாட்டுச் சமயத்தில் சீக்கியர்கள் எவரும் பங்களாதேஷுக்குள் நுழையக் கூடாது என்று பங்களாதேஷ் அரசு தடை விதித்ததை எதிர்த்தே இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

சிதனக் கொடுமை

## பகிரங்க தூக்கை நிறுத்த உயர் நீதிமன்றம் உத்தரவு

புதுடில்லி, டிச. 12

சீதனக்கொடுமைக்காக தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட தாயையும் மகனையும் பகிரங்கமாகத் தூக்கிலிடுவதை நிறுத்தி வைக்கும்படி, இந்திய உயர் நீதிமன்றம் உத்தரவு இட்டுள்ளது.

பொருந்திய சீதனத்தைச் சரிவரக்கொண்டு வராததற்காக ஒரு இளம் பெண்ணைக் கொலை செய்ததற்காகப் பெண்ணின் கணவனுக்கும் மாமியாருக்கும் ஜெய்ப்பூர் நீதிமன்றம் மரணதண்டனை விதித்தது.

அதுமட்டுமல்ல, இரண்டு பேரையும் பகிரங்கமாகத் தூக்கிலிடவேண்டும் என்றும் அந்த நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஜெய்ப்பூர் நீதிமன்றத்தின் பகிரங்கமாகத்தூக்கிலிட வேண்டும் என்ற உத்தரவை எதிர்த்து இந்திய சட்டமா அதிபர் திரு கே.பராசரன் 'ரிட்' மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

சட்டமாஅதிபர் தனது 'ரிட்' மனுவில் கூறியிருந்ததாவது:

அரசியல் சட்டத்தின் 21 ஆவது பிரிவின்படி மரணதண்டனை விதிக்கப்பட்ட ஒருவனுக்கும் மனித கௌரவம் வழங்கப்பட வேண்டும்.

ஆகவே வழங்கப்படும் தண்டனையை நிறைவேற்றும் விதம் காட்டுமிராண்டித்தனமானதாகவும் சித்திரவதை செய்யப்படுவதாகவும் மனிதனின் சுய கௌரவத்தைப் பாதிப்பதாகவும் இருக்கக் கூடாது — இப்படி அவர் கூறியிருந்தார்.

பகிரங்கமாக இரண்டு பேரையும் தூக்கில் இடுவதை நிறுத்தி வைக்கும்படி உத்தரவிட்ட இந்திய உயர்நீதிமன்றம், டிசம்பர் 13ஆம் திகதி ஆஜராகும்படி ராஜஸ்தான் மாநிலத்துக்கும் இந்திய அரசுக்கும் நோட்டீஸ் விடுத்துள்ளது.

இதனிடையில்,ராமிலா மைதானம் அல்லது சவாய் மான்சிங் விளையாட்டு அரங்கில் இருவரையும் பகிரங்கமாகத் தூக்கிலிடும் உத்தரவில் ராஜஸ்தானின் இரண்டு நீதியரசர்கள் கையெழுத்திட்டனர்.

### பாகிஸ்தான் துறைமுகத்தில் சீன கடற்படை

கராச்சி, டிச. 12

சீனக் கடற்படையின் இரண்டு கப்பல்கள் பாகிஸ்தானின் கராச்சித் துறைமுகத்துக்குச் சென்றுள்ளன.

சீன, பாகிஸ்தான் நாடுகளின் கடற்படைச் சரித்திரத்திலேயே முதல் தடவையாக இப்பொழுது தான் சீனக் கடற்படைக்கப்பல்கள் பாகிஸ்தான் சென்றன.

# வெளி உலகில்

## கழுதையை கைவிடப் போகிறது அமெரிக்க ஜனநாயக கட்சி

நியூயோர்க், டிச 12

அமெரிக்க ஜனுதிபதித் தேர்தலில் 'போ கழுதை' என்று கழுதைச் சின்னத்தைக் கைவிடப் போகிறார்கள், ஜனநாயகக் கட்சியினர்.

ஜனநாயகக் கட்சியின் சின்னம் 'கழுதை'– 'கழுதை'யைக் கைவிட்டு புதிய சின்னம் ஒன்றைத் தெரிவு செய்ய ஜனநாயகக் கட்சி திட்டமிடுவதாக ஞாயிற்றுக்கிழமைகளில் வெளிவரும் 'நியூ யோர்க்' சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பொதுமக்களால் அங்கீகரிக்கப்படக்கூடிய சின்னம் ஒன்றை தெரிவு செய்வதுதான் அரசியல் கட்சிக்கு பிரயோசனமானதாக இருக்கும்–இப்படி ஜனநாயக தேசிய கமிட்டிப் பேச்சாளர் ஜோன் புளோரெஸ் சொன்னார்.

அமெரிக்க அதிபர் ரேகனின் குடியரசுக் கட்சியின் சின்னம் யானை.

கடந்த இரண்டு ஜனுதிபதித் தேர்தல்களில் ஜனநாயகக்கட்சி 'கழுதை'ச் சின்னத்தில் இரண்டு முறை போட்டியிட்டுத் தோல்விகண்டது தெரிந்ததே.

### எண்ணெய் உற்பத்தியை குறைக்கப் போவதில்லை

'ஒபெக்' தீர்மானம்

ஜெனீவா டிச. 12

எண்ணெய் உற்பத்தியைக் குறைப்பதில்லை என்று எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள் (ஒபெக்) தீர்மானித்துள்ளன.

மலிவான விலையில் தாராளமாக எண்ணெய் வருங்காலத்தில்இருக்கும் என்று இத் தீர்மானம் வலியுறுத்துகின்றது.

### அணுசக்தி கப்பல் எண்ணிக்கைகளை வெளியிட முடியாது

வெலிங்டன், டிச. 12

நியூசிலாந்து துறைமுகங்களுக்குப் பிரவேசிக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ள அணு சக்திக் கப்பல்களின் பெயர்களை வெளியிட முடியாது என்று பிரதமர் டேவிட் லாங்கே கூறியிருக்கின்றார்.

அணு ஆயுதங்கள், அணு சக்தியில் இயங்கும் கப்பல்கள் நியூசிலாந்து நாட்டுத் துறைமுகங்களுக்குள் பிரவேசிப்பதைத் தடுக்கும் சட்ட மூலம் ஒன்று, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

# மாநிலம்–மாவட்டம்–உள்ளூர்

### மட்டக்களப்பில் வான் அபகரிப்பு

கொழும்பு, டிச. 13

மட்டக்களப்பு நகரில் கடந்த புதன் இரவு தனியார் நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான வான் ஒன்று இனந்தெரியாத நபர்களினால் கொள்ளை இடப்பட்டது.

## உலகத் தமிழ் பண்பாட்டு மாநாடு இன்று சேலத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிச 13

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் 3வது சர்வதேச மாநாடு 13ஆம், 14 ஆம் 15 ஆம் திகதிகளில் தமிழ் நாட்டின் சேலம் மாநகரில் உள்ள விஜயராகவாச்சாரியார் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இந்த இயக்கத்திற்கு உலகின் பலபாகங்களிலும் 30க்கு மேற்பட்ட கிளைகள் இருக்கின்றன. மாநாட்டில் உலகின் பல பாகங்களிலுமுள்ள 40க்கு மேற்பட்ட நாடுகளில் வாழும் சுமார் 1000க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

சேலம் மாநகரில் உலகளாவிய ஒரு மாநாடு நடைபெறுவது இதுவே முதல் தடவை.

உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் பற்றிய வரலாற்று ரீதியான ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய "உலகத் தமிழர்" என்னும் நூல் வெளியிடும் மாநாட்டில் இடம் பெறும்.

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்த இயக்கத்தின் முதல் மாநாடு 1977இல் சென்னையிலும் இரண்டாவது மாநாடு 1980 இல் மொரீசியஸ் தீவிலும் நடைபெற்றன.

## சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுள்ள வரை சிதனப் பிரச்சினை தீராது

ஆய்வரங்கில் உரை

யாழ்ப்பாணம், டிச 13

"சமுதாயத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இருக்குமட்டும் சீதனப்பிரச்சினை இருந்து கொண்டே இருக்கும். எனவே சமூகத்தில் பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்தி, விவசாயிகள், மீனவர்கள் போன்ற உழைப்பாளிகளுக்கு முக்கியத்துவமளிப்பதன் மூலம் சீதனப்பேயை சமூக அரங்கில் இருந்து விரட்டலாம்"

புங்குடுதீவு இளந்தமிழர் மன்றத்தினர் நடத்திய ஆய்வரங்கிற்கு தலைமை வகித்து பேசுகையில் தமிழர் கலாசாரச் சங்கத் தலைவரும் சட்டத்தரணியுமான திரு. எஸ். கே. மகேந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வரைதீவு திருநாவுக்கரசு வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற இந்த ஆய்வரங்கில் திரு. எஸ். கே மகேந்திரன் மேலும் பேசியதாவது:

"தாய்மையே உலக உற்பத்தியின் தானம் என்பதால் தாய்க்கே நாம் என்றும் முக்கியத்துவம் வழங்கவேண்டும். மக்கள், குறிப்பாக ஆண்கள் வீதியில் நடமாடும்போது உயிருக்கு அஞ்சவேண்டிய இன்றையகால கட்டத்தில் பெண்களே பொதுவாழ்க்கையில் தீவிரமாக ஈடுபடவேண்டும். அன்பினால் அனைவரையும் அணைத்துச் செல்லும் சக்தி வாய்ந்த பெண்களை பொதுவாழ்வில் ஈடுபடுவதற்கு கணவன்மார் முழுமனதுடன் அனுமதிக்க வேண்டும். திலகவதியார், மங்கையர்க்கரசியார், இந்திராகாந்தி, கவிக்குயில் சரோஜினி போன்ற தாய்மார்களின் சேவையால் சமயமும் வியத்தகு நன்மைகளைப் பெற்றன. அவர்களின் மனோதிடத்துடனும் வைராக்கியத்துடனும் ஈழப்பெண்களும் சமூக சேவை செய்யப் புறப்படவேண்டும். கஸ்தூரி பாயின் ஒத்துழைப்பும் ஊக்கமும், புத்லிபாயின் அறிவூட்டலும் ஆரோக்கிய அமுதூட்டலும் இல்லாதிருந்தால் காந்தியடிகள் உலகின் தலைசிறந்த தத்துவங்களைத் தந்த தலைவனாக மிளிர்ந்திருக்க முடியாது.

இவ் ஆய்வரங்கில் திருவாளர்கள் ந. தனபாலசிங்கம், செ. ரூபகாந்தன் செ. நித்தியானந்தன் பி. எஸ்ஸி, தி. ஸ்ரீகரன், திருமதி. சந்திராகோபால், செல்வி. ந. அன்பரசி ஆகியோரும் உரையாற்றினர்.

## கரி, பற்பொடியால் பற்கள் பழுதடைவு

### புளோறைட் உள்ள பற்பசையே சிறந்தது என்கிறர் டாக்டர்

வட்டுக்கோட்டை, டிச.13

கரி, களிமண், பற்பொடிமுதலானவற்றைப் பாவிப்பதாலேயே பற்கள் வெகு விரைவில் பழுதடைகின்றன. இவற்றினால் பல் தீட்டும்போது பற்களுக்குத் தீங்கு ஏற்படுகிறது. பற்களைச் சுத்தம் செய்யும்போது புளோறைட் உள்ள பற்பசையைக் கொண்டு பிரஷினால் சுத்தம் செய்வதே சிறந்தது.

டாக்டர் பி. யோகநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

வட்டு கிழக்கு ஆரம்ப சுகாதார அபிவிருத்திச் சபையினரும் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினரும் இணைந்து வட்டுக்கோட்டை கிழக்குப் பகுதியிலுள்ள ஆரம்ப சிறுவர் பாடசாலைச் சிறுவர்களின் பற்களைப் பரிசோதனை செய்து பற்சுகாதாரம் பற்றிய அறிவுரைகளை வழங்கினர்.

சித்தன்கேணி மாதர் சங்கத் தலைவி திருமதி பேரின்பநாயகி சுப்பிரமணியம் தலைமையில் வைபவம் நடந்தது.

வைபவத்தில் வட்டுக் கிழக்கு ஆரம்ப சுகாதார அபிவிருத்திச்சபைத் தலைவரும் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக வலயத் தலைவருமான டாக்டர் ரி. பரதன், வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் திரு. உ. ந. தேவகடாட்சம், வட்டுக் கிழக்கு குடும்ப நல சேவையாளர் திருமதி பஞ்சலட்சுமி வல்லிபுரம், சுகாதார பரிசோதகர் திரு. பி. கருணனந்தன் ஆகியோரும் வட்டுக் கிழக்கு ஆரம்ப சுகாதார அபிவிருத்திச் சபைத் தொண்டர்களும் பாலர் பாடசாலை ஆசிரியைகளும் மற்றும் பெரியோர்களும் தாய்மார்களும் கலந்து கொண்டனர்.

வைபவத்தில் கலந்து கொண்ட சகல சிறார்களினதும் பற்கள் பரிசோதனை செய்யப்பட்டு பழுதான பற்களை உடைய சிறார்களுக்கு சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு வரும்படி அழைப்பு விடப்பட்டது.

## திருமலையில் துப்பாக்கி வேட்டுச் சத்தம்

திருகோணமலை, டிச. 13

செவ்வாய் நள்ளிரவு திருகோணமலை ரயில் நிலையத்துக்கு அருகில் சரமாரியான துப்பாக்கி வெடிச் சத்தங்கள் கேட்டன.

போராளிகள் மறைந்திருந்து சுட்டனர் என்றும் ஊர்காவல் படையினர் திருப்பிச் சுட்டனர் என்றும் ஊர்காவல் படையினர் தரப்பில் சொல்லப்பட்டது.

இப்படியான வெடிச் சத்தங்கள் திருமலை நகரின் சில பகுதிகளில் இரவு வேளைகளில் அடிக்கடி கேட்கின்றன.

### சுகாதார நிலையம்

யாழ்ப்பாணம். டிச. 13

ஊர்காவற்றுறையில் மெலிஞ்சிமுனைக் கிராமத்தில் முதலுதவி சுகாதார நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை மக்கள் சுகாதார விழிப்புக் குழுவின் ஆதரவினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள முதலுதவி சுகாதார நிலையத் தொடக்க விழாவுக்கு கரம்பன் பங்குத் தந்தை வண. பிதா லோறன்ஸ் அடிகள் தலைமை வகித்தார்.

புத்தாண்டு மணக்க அண்ணு கோப்பி ஸ்தாபனத்தார் அளிக்கும் வெகுமதிகள்

உங்கள் வாடிக்கைக் கடைகளில் அண்ணு No. 1 கோப்பிகளை வாங்கி பைக்கற்றுக்குள்ளிருக்கும் கூப்பன்களைக் கொடுத்து வெகுமதிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

3 கிலோ பைக்கற்றுக்கு 1 எவர்சில்வர் கப்
2 கிலோ பைக்கற்றுக்கு 1 பிளாஸ்டிக் கப் & சோசர்
1 கிலோ பைக்கற்றுக்கு 1 பிளாஸ்டிக் கப்
500 கி. பைக்கற்றுக்கு 1 கொப்பி

1-12-85 முதல் 28-2-86 வரை முடியும் விற்பனைக்கே இப்பரிசுகள் வழங்கப்படும்.

வெகுமதிகளை நேரில் பெற்றுக்கொள்ளவேண்டிய இடம்: அண்ணு கோப்பிக் கடை நவீன சந்தை — யாழ்ப்பாணம்,

கடிதத் தொடர்பு: அண்ணு தொழிலகம் — இணுவில்.

ANNA Drink anna COFFEE

### உதய சங்கற்பம்

தேவைகளை மிகவும் சுருக்கிக்கொள், சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப உன்னைத்திருத்தி அமைத்துக் கொள்,

உன்னிடம் இருப்பதை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடு.

- சுவாமி விவேகானந்தர் -

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 13-12-85 தொலைபேசி: 24805 22078 த.பெ. 23

## சிங்கள அரசியல்வாதிகளுக்கு தஹநாவின் 'ஞான'க்குரல்

இனப்பிரச்சினைக்கு மாநில சுயாட்சி மூலம் தீர்வு காணலாம் என்று கலாநிதி டபிள்யூ. தஹநாயக்கா மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

காலி எம். பியும் இப்போது அரசாங்கக் கட்சி உறுப்பினருமான கலாநிதி தஹநாயக்கா இந்த நாட்டின் மூத்த அரசியல்வாதி. முன்னாள் கல்வி அமைச்சர், முன்னாள் பிரதமர். குறுகிய காலமே நாட்டின் தலைமைப் பதவியை வகித்தாலும், பொதுத்தேர்தல் ஒன்றைத் திறம்பட நடத்திக்காட்டிப் பெயர் எடுத்தவர். எப்போதுமே தனக்குச் சரியெனப்பட்டதை வெளியே எடுத்துச் சொல்லத் தயங்காதவர். அதனைச் செயலிலும் காட்டுபவர். அவரைப் பலர் வேறுவிதமாகக் கிண்டல்செய்தாலும்கூட அவர் நிதானமானவர். கட்டைப் பிரமச்சாரி. எப்போதும் மக்களுக்குச் சேவை செய்வதையே தமது தொழிலாகக் கொண்டவர்.

நாட்டின் முக்கியபிரச்சினையான இனப்பிரச்சினை குறித்து அவர் நீண்டகாலமாகமௌனம் சாதித்து வந்தார். மிக அண்மையிலேயே அவர் தமது கருத்தை நாடாளுமன்றத்தில் வெளியிட்டிருந்தார்.

வடக்கில் ஒன்றும் கிழக்கில் ஒன்றுமாக மேலும் இரண்டு நாடாளுமன்றங்களை ஏற்படுத்தவேண்டும். அதன்மூலம் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் தத்தமக்குரிய உரிமைகளுடன் சகோதரர்கள்போல வாழலாம் என்பது கலாநிதி தஹநாயக்காவின் கருத்து.

மாநில சுயாட்சிமுறைதான் இப்போதுள்ள பிரச்சினையைத் தீர்க்கச் சிறந்தவழி என்றும் அவர் கூறினார். தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கியே ஆகவேண்டும் என்பதும் அவரது வாதம்.

அரசாங்கக் கட்சி எம். பியாக இருந்து வரும் கலாநிதி தஹநாயக்கா இவ்வாறு கருத்துத் தெரிவித்தது சில சக எம். பிக்களுக்குப் பிடிக்கவில்லை. அதிலும் தீவிரவாத எம். பிக்கள் கலாநிதி தஹநாயக்காமீது சொல்லம்பு பாய்ச்சினார்கள்.

மூத்த அரசியல்வாதியின் அனுபவத்தில் எழுந்த கருத்துக்களை விபத்துரீதியில் நாடாளுமன்ற எம். பிக்களாக வந்த "சிறுசு"கள் தமக்கு ஏற்றபடி விமர்சனம் செய்யவும் தவறவில்லை.

ஆனால் கலாநிதி சலிக்கவில்லை. நாடாளுமன்றத்தில் கூறிய அதே கருத்துக்களைக் கொழும்பில் நடந்த முஸ்லிம் வாலிப முன்னணிக் கூட்டத்தில் மீண்டும் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

நாடாளுமன்ற உரையைவிட ஒருபடி மேலே சென்று, யாழ்ப்பாணத்தில் தனி நாடாளுமன்றம் ஏன் நிறுவ முடியாது என்று அவர் கேட்டிருக்கிறார். யாழ்ப்பாணத்தில் ஒன்று, மட்டக்களப்பில் ஒன்று, கொழும்பில் ஒன்றாக மூன்று அரசாங்கங்கள் இயங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கின் வடபகுதியில் உள்ள குர்டிஷ் இன மக்களுக்கு தனி நாடாளுமன்றம் ஒன்றை அந்த நாட்டின் தலைவர் அமைத்துக் கொடுத்திருப்பதையும் அவர் உதாரணத்துக்கு எடுத்துக் காட்டினார்.

வடக்கு, கிழக்கு இணையாத ஒரு சுயாட்சி முறை தமிழர்களின் தனித்துவத்துக்கும் பாதுகாப்புக்கும், ஒற்றுமைக்கும் உத்தரவாதம் தருமா என்பது சந்தேகம்.

சுயாட்சி, சமஷ்டி ஆட்சி என்பன புதியவை அல்ல. பல நாடுகளில் நல்ல விதத்தில் நடைமுறையில் உள்ளவை. அவற்றை வழங்கித் தமிழர்கள் தம்மைத் தாமே ஆளும் அதிகாரத்தை வழங்குவதால் சிங்களவர்களுக்கு என்ன வந்துவிடப்போகிறது? அவர்களுக்கு அதனால் என்ன நஷ்டம்?

தமிழர்கள் சுயமரியாதையுடனும் கௌரவத்துடனும் வாழவேண்டியவர்கள். எவருக்கும் அடிமையாக இருக்க வேண்டும் என்ற நியதி அவர்களுக்கு இல்லை.

இதனை ஒவ்வொரு சிங்களத் தலைவரும், அரசியல்வாதியும் உணரத் தவறுவது ஏன்? காலி எம்.பி.யைப் போலவே அரசியலில் பழுத்த மூத்த தலைவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினையை வேறுபக்கத்தால் பார்க்கிறார்களே. அது நாட்டின் துரதிர்ஷ்டம் என்றே கொள்ளவேண்டும்.

எத்தனைபேர் எதிர்த்தாலும் நியாயமான கருத்தைத் தெரிவிக்கும் கலாநிதி தஹநாயக்கா போன்றவர்களின் குரல் சிங்கள அரசியல்வாதிகளுக்கு "ஞான"த்தைக் கொடுக்குமாக.

# ஆனைமுகன் ஆராதனை ஆன்ம ஈடேற்றம் தருவது

## விநாயக விரதம் விக்கினம் விலக்கும்

- இளஞ் சைவப்புலவர் இ. ஸ்ரீதரன் -

(இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிள்ளையார் பெருங்கதையினையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.)

ஓங்கார வடிவமாகி 'ஓம்' என்ற பிரணவ ஸ்வரூபனாக விளங்குகின்ற ஸ்ரீ கணேசப் பெருமான் நாம் காணும், நாம் நுகரும் எல்லாப் பொருள்களுக்கும் மூலகாரணமாய் நிற்கின்ற தன்மையினால் முன்னவன் என்கிறோம். திருமுறையிலே பத்தாவதாக வைத்து எண்ணப்படும் திருமந்திரத்திலே கூட விநாயகர் பெருமை அருமையாகக் கூறப்பட்டிருக்கின்றது.

நல்ல வாக்குவன்மையும் தூயசித்தையும் செல்வமும் நோயற்ற வாழ்வும் கிடைக்க வேண்டுமேயானால், பவளம் போன்ற திருமேனியையுடைய தும்பிக்கையுடைய விநாயகப் பெருமானைத் தவறாமல் மலர் கொண்டு அர்ச்சிக்க வேண்டும் என்று தமது "வாக்குண்டாம்" என்ற மூதுரையில் கூறுகிறார் ஔவையார்.

விநாயகரின் பிரணவ வடிவான ஓங்காரத்துள் அடங்கும் அகரம், உகரம், மகரம் என்பன சிவம் 'சக்தி, நாதமாகும். அவரின் ஐந்து திருக்கரங்களும் பஞ்ச கிருத்தியம் என்னும் ஐந்தொழிலையும் குறிக்கும். மூன்று கண்களும் சூரியன், சந்திரன், அக்கினி ஆகும்.

விநாயகப் பெருமானின் பிரபாவம் பெரிது. அவரே வெவ்வினையை வேரறுக்க வல்லவர். வேட்கை தணிவிப்பவர். விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனாக விளங்கும் கணபதிக்கே எங்கும் முதற் பூசை நிகழ்கின்றது.

பரமசிவனும் பார்வதியும் ஒரு சமயம் திருக்கயிலையில் மந்திரங்கள் எழுதியிருந்த சித்திரமண்டபத்தைச் சேர்ந்தனர். அங்கே எழுதப்பெற்றிருந்த பிரணவத்தைத் திருக்கண்ணுற் கண்டனர். பிரணவம் பிரிந்து ஆண்டவன் எழுத்தாகிய அகரம் ஆண் யானையாகவும் அம்மை எழுத்தாகிய உகரம் பெண் யானையாகவும் மாறின. இரண்டும்சேர்வதுபோல் காட்சியளிக்க விநாயகப் பெருமான் யானை முகத்தோடு தோன்றியருளினார். இதையே காஞ்சிப் புராணமும், கந்தபுராணமும் கூறுகின்றன.

விநாயகப் பெருமானுடைய திருவுருவம் ஆனந்தவடிவமானது. அபூர்வ அழகு வாய்ந்தது. இவர் ஞான வடிவினர். ஒற்றைக் கொம்பினாலே மகாபாரதக் கதையை எழுதினார் என்பது வரலாறு.

இருக்கு வேதம் கணபதியை 'கணானாம் த்வாம் கணபதி அவாமஹே' எனப் போற்றுகின்றது. தம்மை வழிபடும் அடியவர் துன்பத்தை நொடிப்பொழுதில் களைய வல்லவர் கணேசர்.

நம்பியாண்டார் நம்பிக்கு அருள் புரிந்த விக்னேஸ்வரர் தேவாரத் திருமுறைகள் கிடைக்க வழி செய்தார். ஔவையார் கைலைமலை போக உதவினார். காவிரியாறு பாயக் கருணை செய்தார். கஜமுகனை வதம்செய்து மூஷிகமாக்கிக் கொண்டார். கந்தன் வள்ளியைக் கைப்பிடிக்கவும் பழநியாண்டவராகிப் பக்தர்களுக்கருள் புரியவும் அருள் புரிந்தவர் ஆனைமுகன்.

விநாயகப் பெருமானுக்குரிய விரதங்களில் 'விநாயக சஷ்டி' மகிமை பொருந்தியது.

மார்கழி மாத வளர்பிறைச் சஷ்டி திதியும் சதய நட்சத்திரமும் சேரும் தினம்தான் விநாயக சஷ்டி தினமாகும். இத்தினத்துக்கு முன் 20 நாட்கள் தொடர்ந்து இவ்விரதம் அனுஷ்டிந்து உய்தி பெறலாம்.

கார்த்திகை மாதப் பூரணையும் திருக்கார்த்திகை நட்சத்திரமும் சேர்ந்து வரும் தினத்துக்கு அடுத்தநாள் விநாயக சஷ்டி விரதத்தை ஆரம்பித்தால் 21-ம் நாளாக விநாயக சஷ்டி வரும்.

விநாயக சஷ்டி விரத ஆரம்ப நாளில் 21இழைகளாலான நூல் ஒன்றைக் கையிற் கட்டிக்கொள்ள வேண்டும். அன்று முதல் 20நாளும் ஒருநேர உணவு உண்ணும். 21-ம் நாள் சஷ்டியன்று உபவாசமிருந்து மறுநாள் பாரணை செய்ய வேண்டும்.

விரதம் இருப்பவர்கள் மரண வீடு, வைத்தியசாலை, சந்தை முதலியவற்றுக்குச் செல்லக் கூடாது. முழுமையான குறிக்கோள் விரதத்தை அனுஷ்டிப்பதிலேயே கண்ணும் கருத்துமாயிருக்க வேண்டும்.

விநாயக விரதம் அனுஷ்டித்து இகபரசுகங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பிள்ளையார் பெருங்கதைப் படிப்பு விரதநாள்கள் புனிதமாகக் கணிக்கப்படுகின்றன.

திருமகளின் கடாட்சம் கிடைக்கவும் கலைமகளின் கடாட்சம் கிடைக்கவும் சிறப்பான வாழ்வு கிடைக்கவும் கருணை நிறைந்த உள்ளம் வரவும் தீமையெல்லாம் நம்மையணுகாது பஞ்சிற் பட்ட நெருப்புப் போன்று பறந்தோடவும் வேண்டுமேயானால் கணபதியைக் கைதொழ வேண்டும்.

இப்பரந்த நிலவுலகின் கண்ணே பிறவியென்னும் நோய் அற்றுப் போகவும் எண்ணிய கருமங்களும் எண்ணிய பொருள்களும் எல்லாம் சுலபமாக வந்து சேரவும் ஆனைமுகக் கடவுளை அடிபணிந்தால் மட்டுமே முடியும்.

ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்கு ஆறுமுகக் கடவுளின் அண்ணனான ஆனைமுகக் கடவுளை ஆராதிக்க வேண்டும். அவனன்றி ஓரணுவும் அசையாது என்றபடி யாவற்றுக்கும் மூலகாரணமான மூர்த்தியாக விளங்கும் மூஷிக வாகனனை காதலாற் கைகூப்ப வேண்டியது யாவரினதும் கடமையாகும்.

### ஞானக்கதிர்

பிறவி எடுத்ததன் பயனைப் பெறவேண்டுமேயாயின் பிள்ளையாரை வணங்குதல் வேண்டும். அங்ஙனம் அவரடி பணிந்து, வாழ்த்தவாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை ஏத்தி ஏத்தித் துதித்துப் பேரானந்தப் பெருவாழ்வு பெறுவோமாக.

## மருந்து விநியோகம் கம்பூட்டர் மயம்

கொழும்பு, டிச 13

நாட்டில் அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கு மருந்து விநியோகம் செய்யும் வேலைகளை கம்பூட்டர் மயப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து உள்ளது.

இனிமேல் அந்த அந்தப் பகுதி ஆஸ்பத்திரிகளில் உள்ள மருந்துக் கையிருப்பு பற்றிய சரியான தகவல்களை இலகுவில் பெற முடியும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

## விஞ்ஞானபீட மாணவர்கள்

மட்டக்களப்பு, டிச 13

மட்டக்களப்பு வந்தாறுமூலை பல்கலைக்கழகக் கல்லூரி விஞ்ஞான பீட மாணவர்களுக்கான பகுதி II பரீட்சை எதிர் வரும் 16ஆம் திகதி ஆரம்பமாகும்.

# சிறப்புகள் நிறைந்த நபிகளின் வாழ்க்கை

பானுஹாஸன் றபீக் [பிர்]

உலக வரலாற்றின் சரித்திரத்தை தெளிவுத் தெளித்து வடித்துத்தந்த கலைக்களஞ்சியக் கர்த்தாக்களும், அறிவுலக அரியணையை அலங்கரிக்கச்செய்யும் நோபல் பரிசுபெற்ற மாமேதைகளும், வரலாற்றினை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ச்சி செய்த சிந்தனையாளர்களும் அண்ணலர் அவர்களின் வாழ்க்கையினை ஒரு தனித்துவமான கண்ணோட்டத்திலேயே மதிப்பிட்டுள்ளனர்.

இதற்குக் காரணம் நபிகள் (ஸல்) அவர்களின் வாக்குகளும், வாழ்க்கை முறைகளும் அகிலத்தாருக்கு அழகிய முன்மாதிரியாக அமைந்திருப்பதேயாகும்.

எம்பெருமானார் அவர்கள் அறிவின் ஒளியாக, ஆத்மீகத்தின் தலைவராக, படைத்தளபதியாக, பொருளியல் நிபுணராக இப்படி ஒவ்வொருதுறையின் வழிகாட்டியாக இருந்தார்கள்.

ஒருகாலத்தில் வீராதி வீரன் அலெக்ஸாண்டரும் சண்டமாருதன் சிசுரோவும் அண்ணல் நபி அவர்களுக்குப் பின்னே அணிவகுத்த சரித்திரம் என்றும் மறக்க முடியாது.

பஞ்சமா பாதகத்தின் இருப்பிடமாக இருந்த அராபிய பிரதேசம் அவர்களின் நபித்துவத்தின் பின் பசுஞ்சோலைகளாக பண்பாட்டுப் பிரதேசத்தின் நிலைக்களனாக மாறியது.

அண்ணலவர்களின் தோழர்கள் அவர்களின் கட்டளைகளை ஏன்? எதற்காக? என்று கேட்கவில்லை. அவற்றைச் செய்து முடிப்பதில் சிரமேற்கொண்ட ஸஹாபாப் பெருமக்களை வரலாற்றில் காண்கின்றோம்.

தொடுகடல் போல், தொடுத்து நின்று தொடைநடுங்கி வாழ்ந்திடாது விடை பகரும் வள்ளல்களான நபித்தோழர்களையே வரலாற்றில் காண்கின்றோம்.

நேரானவழியில்நடத்த சீரான கலீபாக்கள் விசுவாசம் கொண்ட அன்னைமார்களான நபிகளாரின் மனைவிமார்கள், அண்ணலின் வாழ்க்கைக்குத் தங்களை அர்ப்பணித்து சரித்திரம் படைத்த நபித்தோழர்கள், அண்ணலவர்களின் வாழ்க்கையினைத் தெள்ளித் தெளித்தெடுத்த இமாம்கள், சட்டமேதைகள், தாபியீன்கள் அண்ணலவர்களின் வரலாற்றின் பின்னணியை அணிகலனாக அலங்கரிக்கச் செய்கின்றனர்.

எனவே அண்ணலவர்களின் வாழ்க்கையை வரலாற்றுப் பின்னணியில் ஒப்பிட்டுப் பார்த்த சிந்தனையாளர்களும் ஒப்பிட்டுப் பார்க்கமுனையும் சிந்தனையாளர்களும் அவர்களின் வாழ்க்கையினைப்பற்றிக் கணக்கிட முடியாது என்று கூறியுள்ளார்கள்.

நபி அவர்களின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அருமையானவை ஆராய ஆராய வளைந்து கொடுக்கும் தன்மையுடையவை.

அண்ணலவர்களின் வாழ்க்கையினை முழுக்க முழுக்க முற்றும் அறிந்த மக்கள்யாருமில்லைஎன்றே கூறவேண்டும். இக்கருத்தினை வரலாற்றாசிரியர்கள் முழுக்க முழுக்க ஏற்றுக்கொண்டுள்ளனர். அண்ணலவர்களை வரலாற்றுப் பின்னணியில் நோக்கும் சரித்திர ஆசிரியர்கள்கூட அவர்களின் வாழ்க்கை முறையை வளைந்துகொடுக்கும் வற்றாத ஜீவநதியாகவே கணித்துள்ளனர்.

23 வருடங்களுக்குள்ளேயே மாபெரிய இஸ்லாமிய சாம்ராஜ்யத்தைத் தோற்றுவித்த மாநபியவர்கள் அராபிய மணல் வெளிகளிலும், ஆபிரிக்கக் காடுகளிலும், ரஷ்ய பனித் தரைகளிலும், மேனாட்டு நெஞ்சகத் தாமரைகளிலும் குடிகொண்டுள்ளார்.

"எண்ணமே வாழ்வு" என்று கூறினார்கள் அண்ணலவர்கள். -பெரிய தத்துவத்தை விளக்கும் வார்த்தைகள் இவை.

வாக்கினால் சொன்னதை வாழ்வில் செய்து முடித்தார்கள். இப்படியாக இவர்களின் ஒவ்வொரு சொல்லும் செயலும் வரலாற்றுப் பின்னணியில் அணிகலன்களாகவே திகழ்கின்றன.

இன்று நடக்கும் யுத்தங்களெல்லாம் ஒரு குறிய நோக்கத்துடன் நடைபெறுகின்றன. ஆனால் வாளாயுத முனையிலே வளர்பிறை இஸ்லாத்தை வளர்த்த அண்ணலவர்களின் யுத்த

(4 ஆம் பக்கம் பார்க்க)



### பொய்யாமொழி

**குறள்:**

நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந் - தெழிலி

தான்நல்கா தாகி விடின்.

**பொருள்:**

மேகம் கடலில் இருந்து நீரைக் கொண்டு அதனிடத்திலே பெய்யாமல் விடுமானால், பெரிய கடலும் தன் வளம் குன்றிப்போகும்.

## நாவலர் வழியில் நின்று தமிழ் வளர்ச்சிக்கு தொண்டு

நல்லூர், டிச 13

தமிழ் மக்களாகிய நாம் நாவலர் வழியில் நின்று, சைவத்திரு நெறிக்கும் தமிழ்வளர்ச்சிக்கும் தொண்டு புரிய வேண்டும்.

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் நடத்திய ஆறுமுக நாவலர் குருபூசை பெருவிழாவில் மன்றச் செயலாளர் திரு. கா. இரகுநாதன் இப்படிக் கூறினார்.

ஈழத்தின் சைவ நிறுவனங்கள், சைவமன்றங்கள் ஆகியவை மக்கள் முன்னிலையில் நாவலர் பெருமானின் சைவ வினாவிடை நூல்களை சமர்ப்பித்து பழக்க வேண்டும் எனவும், நாவலர் நூலகங்களைத் தொகுதிகள் தோறும் அமைக்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

மன்ற அமைப்பாளர் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

அவர் அங்கு உரையாற்றும் பொழுது ஒரு சைவன் கைக்கொண்டு ஒழுகவேண்டியது சமய ஒழுக்கங்கள், ஆசாரங்கள் ஆகியவையே.

அவற்றின் மூலம்தான் மனிதன் தன்னை ஆன்மீக சீலராக வளர்த்துக் கொள்கிறான்.

இப்படி அவர் கூறினார்.

## விதவைகளுக்கு கைப்பணி பயிற்சி

நல்லூர், டிச 13

திருமலையில் இருந்து இடம்பெயர்ந்து வந்து தமிழ் மகளிர் அவை முகாமில் தங்கியிருக்கும் கணவனை இழந்தவர்களுக்கு கைப்பணிப் பயிற்சி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக ஐந்து பெண்களுக்கு தையல் மற்றும் பனம்பொருள் உற்பத்தி சம்பந்தமான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

இவர்களுக்கு தினமும் குறிப்பிட்டளவு ஊதியமும் வழங்கப்பட்டு வருகிறது.

# சூடுபட்டு மரணமானோரின் பதிவுகளை செய்வது எப்படி?

## சட்டமா அதிபர் வரை பிரச்சினை செல்கிறது

மட்டக்களப்பு, டிச 13

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இறப்பவர்களுக்கு இறப்புச் சான்றிதழ் வழங்குவதில் பிறப்பு - இறப்பு பதிவாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தெரியவருகிறது.

பொதுவாக மரண விசாரணை நடைபெற்றால் மரணத்துக்கான காரணமும் தெரிவிக்கப்படவேண்டும்.

தீர்ப்பு நீதிபதி, மரண விசாரணை அதிகாரி, பொலீஸ் அதிகாரி ஆகியோரால் வழங்கப்படலாம்.

ஆனால் தமிழ்ப்பகுதிகளில் துப்பாக்கிப் பிரயோகத்துக்குப் பலியானோரின் சடலங்கள் மரண விசாரணையின்றி பிரேத பரிசோதனையுடன் மட்டும் வழங்கப்படுகின்றன. இதனாலேயே பிறப்பு, இறப்பு பதிவாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள்.

மரணம் துப்பாக்கிச் சூட்டு மரணம் என பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டாலும் கொலையா? தற்கொலையா? விபத்தா? என்று தீர்ப்பு இல்லை.

அதே போன்று தான் சில சந்தர்ப்பங்களில் ஆயுதப் படையினரின் பிரேதங்களும் மரண விசாரணையின்றி அவர்களால் கொண்டு செல்லப் படுகின்றன.

இது தொடர்பாக பிறப்பு, இறப்பு பதிவாளர்கள் மாவட்ட பதிவாளரிடம் புகார் தெரிவித்துள்ளார்கள்.

மாவட்ட பதிவாளர் சட்டமா அதிபரிடம் ஆலோசனை கேட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சொத்து மாற்றம் உட்பட பல முக்கிய பிரச்சினைகளின் போது இறப்புச் சான்றிதழ் அவசியம் என்பது குறிப்பிடத்தக்கது.

### சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம் டிச 13

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை கஜமுக சூரசங்காரம் இடம் பெற உள்ளது.

தினமும் நடந்து வரும் பிள்ளையார் பெருங்கதைப்படிப்பும் பஞ்சமுக அர்ச்சனையும் செவ்வாய்க்கிழமையுடன் முடிவடைகின்றன.

இந்த ஆலயத்தில் இம்முறை தான் சூரசங்காரம் நடைபெற உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**அமெரிக்கா செல்லவேண்டுமா?**

அமெரிக்கா செல்வதற்கான ரூரிஸ்ட் விசா (Tourist Visa), மல்றிபிள் விசா (MultipleVisa), டிக்கட், Travelers Cheque ஆகியவற்றைத் சாமதமின்றிப் பெற்றுக்கொள்ள எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்,

**RAJEEVAN TRAVELS**

42, மணிக்கூட்டு வீதி,
(குளம் வீடியோவுக்கு முன்பாக)
யாழ்ப்பாணம். T'Phone: 23665

**உதயன்**

13 - 12 - 98

**Rajeevan Travels**

பாஸ்போட், பொண்ட், விசா, விமான ரிக்கற், அவசரகால பாஸ்போட் மற்றும் அனைத்துக்கும் உடன் தொடர்புகொள்க.

**RAJEEVAN TRAVELS**

42, மணிக்கூட்டு வீதி,
(குளம் வீடியோவுக்கு முன்பாக)
யாழ்ப்பாணம். T'Phone: 23665

ரூபா 50,000 பெறுமதியான

# காக்கி யூனிபோம் துணி கொள்ளை

## மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு, டிச. 13

மட்டக்களப்பு மாநகர சபைக் கட்டடத்துக்குள் புகுந்த இனந்தெரியாத கோஷ்டி ஒன்று 50,000 ரூபா பெறுமதியான காக்கிநிற யூனிபோம் துணி, டைப்ரைட்டர் ஆகியவற்றைக் கொள்ளையடித்தது.

அதற்கு முன்னர் அந்த கோஷ்டி காவலாளர் இரண்டு பேரையும் பயமுறுத்தியது.

அச்சமயத்தில் இரவு மேற்பார்வை செய்ய மட்டக்களப்பு மாநகர விசேஷ ஆணையாளர் திரு. பெனடிக்ற் தார்சியஸ் வந்திருந்தார்.

அவரையும் அந்தக் கோஷ்டியினர் பயமுறுத்திவிட்டு கொள்ளையை நடத்தினர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவதினத்துக்கு ஒரு நாள் முன்பதாகத்தான் இந்த யூனிபோம் துணிகள் மாநகரசபைக்கு வந்துசேர்ந்தன.

## கொழும்பில் மழை

கொழும்பு, டிச. 13

கொழும்பில் நேற்று கடும்மழை நேற்று மாலை முதல் இடிமுழக்கத்துடன் இடைவிடாது மழை பெய்துகொண்டிருந்தது.

## துப்பாக்கிச் சூடு; குண்டு.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கத்திலிருந்து கேட்ட குண்டுவெடிப்புச் சத்தங்களும் இன்னொரு பக்கத்திலிருந்து வந்த சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களும் நகரைக் கலக்கின.

கடைகள் இழுந்து மூடப்பட்டன. மினி பஸ்கள், பஸ்கள், ஏனைய வாகனங்கள் கண்மூடித் திறப்பதற்குள் பறந்து மறைந்தன.

நகரில் சன நடமாட்டம் குறைந்தது. அவர்கள் அஞ்சி நடுங்கியவாறு ஓடினர். நகரம் வெறிச்சோடியது.

ஜீ. சீ. ஈ. பரீட்சை எழுதும் மாணவர், இறுதிவரை காத்திருக்காது இயன்றவரை எழுதிக் கொடுத்துவிட்டு பதற்றத்துடன் வீட்டுக்கு விரைந்து சென்றுவிட்டனர். ஆஸ்பத்திரியில் தங்கியுள்ள நோயாளர்களுக்கும் உணவு இல்லை.

வெளியில் இருந்து உணவு கொண்டுவரும் உறவினர்கள் வராததே இதற்குக் காரணமாகும்.

### வீடுகள் மீது குண்டு

ஆயுதப் படையினர் திரும்பிச் சென்ற சமயம் வீதியில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட சைக்கிள்களை கவசவாகனங்கள் நெரித்துக் கொண்டு சென்றன.

அன்றாடத் தொழிலில் ஈடுபடுபவர்களும், தொழிலை அவசரமாக முடித்துக்கொண்டு நடையில் வீடு சென்றனர். சில வீடுகள்மீது துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்து இருந்தன.

### வர வர வேட்டு

சுமார் 2 மணித்தியாலங்களின் பின்னர் ஆயுதப் படையினர் நாவலர் வீதி வழியாக காங்கேசன்துறை வீதிக்குச் சென்று பெரிய கடைச் சந்திக்கு வந்தனர். வரும் வழி எல்லாம் சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த வண்ணமே வந்தனர்.

பின்னர் பெரியகடைச் சந்தியில் நின்று சில நிமிடங்கள் சரமாரியாகச் சுட்டனர்.

அப்பொழுதே இரண்டு வயோதிபர்கள் துப்பாக்கிக் குண்டுகள் தாக்கி மரணமானார்கள்.

அவர்கள் பெயர்கள் வருமாறு:

1. எஸ். துரைசாமி, சங்கானை வீதி, மாணிப்பாயைச் சேர்ந்தவர். வயது 79.

2. கிருஷ்ண பிள்ளை, வயது 59, அரியாலை வாசி.

துரைசாமி, மலாயன் பென்ஷன்காரர். பென்ஷன் எடுக்க வந்த இடத்தில்தான் துப்பாக்கிச் சூட்டுக்கு இவர் இலக்கானார். மின்சார நிலைய வீதியில் வைத்து இவர் மீது துப்பாக்கிக் குண்டு பாய்ந்தது.

ஆஸ்பத்திரி வீதியில் வைத்து கிருஷ்ணபிள்ளை மீது துப்பாக்கிக் குண்டு பாய்ந்தது.

### மூவருக்கு காயம்

காயமடைந்தவர்கள் விவரம் வருமாறு:-

1. எஸ். மகாலிங்கம் வயது 16 திருநெல்வேலியைச் சேர்ந்தவர் கையில் ஏற்பட்ட காயத்துக்கு சத்திர சிகிச்சை அளிக்கப்பட்டது.

2. இ சுபைர், வயது 18. முஸ்லிம் கல்லூரி வீதியைச் சேர்ந்தவர். இடுப்பில் குண்டு பாய்ந்தது.

3. கே. ஜெயவீரசிங்கம், வயது 22. மணிக்கூண்டு வீதியைச் சேர்ந்தவர். காலில் சிறு காயம். சிகிச்சை பெற்று வெளியேறிவிட்டார்.

நகரில் ஆயுதப்படையினர் நடமாடிய நேரம் கோட்டை முகாமில் இருந்தும் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்ட வண்ணம் இருந்தன.

# விளையாட்டரங்கு

# ஆஸ்திரேலிய - இந்திய முதல் டெஸ்ட் இன்று

### சொந்த மண்ணில் மண்டியிட்ட ஆஸி. அணி தலைநிமிர சந்தர்ப்பம் கிட்டுமா?

அடிலயிட், டிச. 13

ஆஸ்திரேலியாவில் கிரிக்கெட் சுற்றுலாவை மேற்கொண்டிருக்கும் இந்திய அணி இன்று வெள்ளிக்கிழமை முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் மோதுகிறது.

இந்திய ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் அடிலயிட் ஓவல் மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது.

இரு அணிகளும் இந்த கிரிக்கெட் சுற்றுலாவில் மூன்று டெஸ்ட் போட்டிகளில் மோதும்.

டெஸ்ட் ஆட்டத்தில் கலந்து கொள்ளும் ஆஸ்திரேலிய அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது.

1980 ஆம் ஆண்டு முதல் ஆஸ்திரேலிய அணியில் அங்கம் வகித்து வந்த ஜியோவ் லோசன் ஆஸ்திரேலிய அணியிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறார். சுருள்பந்து வீச்சாளர் பொப் ஹொலண்ட்டும் அணியிலிருந்து அவுட்.

இவர்களது இடத்துக்கு விக்டோரியாவின் வேகப் பந்து வீச்சாளர் மேர்வ் ஹியூஸ், துடுப்பாட்ட வீரர் ஜியோவ் மார்ஷ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

புதிய ஆஸ்திரேலிய அணி வருமாறு -வெயின் பிலிப்ஸ், ருெபி கேர், டேவிட் பூன், அலன் போர்டர் (அணித் தலைவர்), கிரேக் றிச்சி, டேவிட் குக்ஸ் (உதவி கப்டன்), கிரேக் மத்தியூஸ், மேர்வ் கியூஸ், ரே பிரைட், கிரெய்க் மக்டோமர்ட், டேவ் கில்பேர்ட், ஜியோவ் மார்ஸ்.

பன்னிரண்டாவது வீரர் யார் என்பது இன்று ஆட்டம் ஆரம்பமாவதற்கு சற்று முன்னர் அறிவிக்கப்படும்.

இந்திய அணிக்கு கபில் தேவ் தலைமைதாங்குகிறார்.

இந்திய அணி வீரர்களின் பட்டியலை முடித்தவரை காலம் தாழ்த்தி அறிவிப்பது வசதியாக இருக்கும் என அணியின் முகாமையாளர் எஸ். வெங்கட்ராகவன் தெரிவித்தார்.

இந்தியாவின் பந்து வீச்சுத் தாக்குதலைப் பொறுத்தவரை முக்கிய இடத்தைப் பெறுபவர்கள் வேகப் பந்துவீச்சாளர் கபில் தேவ், சுருள் பந்து வீச்சாளர்கள் லக்ஷ்மன் சிவராமகிருஷ்ணன், ஷிவ்லால் யாதவ் ஆகியோர்.

தனது சொந்த மண்ணிலேயே முதல் தடவையாக மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரில் நியூஸிலாந்து அணியிடம் ஆஸி அணி மண்டியிட்டிருக்கிறது.

அதே வேளையில் இந்திய ஆஸி டெஸ்ட் இன்று தொடங்குகிறது. ஆஸி கிரிக்கெட்டைப் பொறுத்தவரை இது வாழ்வா சாவா என்ற போராட்டத்தை தரும் டெஸ்ட் என்றால் அது மிகையாகாது.

இன்று ஆரம்பமாகும் முதலாவது டெஸ்ட் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 17 ஆம் திகதி வரை நடைபெறும்.

இந்த ஆட்டத்தின் நேர்முக வர்ணனையை அகில இந்தியா ரேடியோ காலை 6 மணி முதல் 8 மணிவரையும்—

பின்னர் காலை 8.40 முதல் 10.40 வரையும்—

நண்பகல் 11 மணி முதல் 1.05 வரையும் ஒலிபரப்பும்.

## யாழ் முஸ்லிம் பகுதி பொது நூலகக் கிளை பற்றி ஆணையாளர் அறிக்கை

யாழ்ப்பாணம், டிச. 13

யாழ் முஸ்லிம் பகுதியில் பொது நூலகக் கிளையை ஸ்தாபிப்பதற்காக முஸ்லிம் கல்லூரி வீதியில் மாநகர சபையின் சந்தைக் கட்டடத்தை மாற்றி அமைக்கும் வேலை ஏற்கனவே திட்டமிட்டவாறு இன்று 13–ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படமாட்டாது.

இது சம்பந்தமாக யாழ். மாநகரசபை ஆணையாளர் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை விவரம் வருமாறு:–

யாழ். முஸ்லிம் பகுதியில் பொதுநூலகக் கிளையை ஸ்தாபிப்பதற்காக முஸ்லிம் கல்லூரி வீதியில் மாநகர சபையின் சந்தைக் கட்டடத்தை மாற்றி அமைக்கும் வேலையை இன்று 13-12-85-இல் மீண்டும் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருந்தது.

எனினும் இது விடயம் சம்பந்தமாக சில பிரச்சினைகள் எழுந்துள்ளதனால் அதில் மாநகராட்சி மன்றமும் மையப்பொருளாக நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதனாலும் மாநகராட்சி மன்றத்தின் நடவடிக்கை காரணமாக முஸ்லிம் சமூகத்திற்குள் பிளவு உண்டாக்கக்கூடிய நிலை ஏற்படும் என்று சிலர் கருதுவதாலும் 13-12-85 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படவிருந்த இந்த வேலையைக் கைவிட்டுள்ளோம்.

உடனடியாக சர்ச்சை இல்லாத ஒரு மத்திய இடத்தை தெரிவுசெய்து பொதுமக்களே எமக்குத் தருவார்களானால் அந்த இடத்தில் பொதுநூலகக் கிளையை ஸ்தாபிக்க நாம் தயாராக உள்ளோம்.

அதே போன்று எமது பொறுப்பில் தற்போதிருக்கும் சந்தைக் கட்டடம் சம்பந்தமாகவும் நாம் மேலும் எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றியும் பொதுமக்களே தீர்மானிக்க வேண்டும் என்று கருதுகிறோம்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ரூபவாஹினி**

13-12-85

மாலை

5-00மணி — செய்திகள்
5-05 — ஸ்கூபி டு (கார்ட்டூன்)
5-30 — மலரும் அரும்புகள் (குழந்தைகள் நிகழ்ச்சி தமிழ்)
6-00 — விவரணம்
6-30 — செய்திகள்
7-00 — விவரணம்
7-25 — ஸ்வர சங்கலன
8-00 — செய்திகள் - சிங்களம்
8-20 — சங்கீத நிகழ்ச்சி (சிங்களம்)
8-35 — 'பத்தினி வழிபாடு' போட்டி நிகழ்ச்சி
9-00 — செய்திகள் (ஆங்கிலம்)
9-20 — சங்கீதம்
9-25 — டேற்லைன் (உலக நடப்பு விவகாரம்)
9-45 — ஜனாதிபதி திரைப்பட விருது –1985
11-00 — ஒளிபரப்பு முடிவு.

## ஐ. நா. சாசனத்தில் உள்ள சுயநிர்ணய உரிமையையும் அங்கத்துவ நாடுகள் கவனிக்க வேண்டும்

### கருத்தரங்கில் சிவத்தம்பி உரை

யாழ்ப்பாணம், டிச13

ஐ. நா. சாசனத்தில் மனித உரிமைகளை அங்கீகரித்துள்ள அனைத்து நாடுகளும் சாசனத்தில் உள்ள சுயநிர்ணய உரிமை ஷரத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இனங்களுக்கு இடையிலான சமத்துவம், நீதிக்கான இயக்கம் நடத்திய மனித உரிமைகள் கருத்தரங்கில் உரையாற்றிய யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர் பேராசிரியர் கா. சிவத்தம்பி மேற்கண்டவாறு கூறினார்.

சுவாமி ஜெயசீலன் கருத்தரங்குக்கு தலைமை வகித்தார்..

பேராசிரியர் சிவத்தம்பி தொடர்ந்து பேசியதாவது:

இன்று நாட்டில் உள்ள நிலைமை, போராட்ட நிலைமை என்பன பற்றிய பிரக்ஞையின் பின்னணியில் மனித உரிமைகள் பற்றிய சிந்தனை நம்மைக் கவர்வது தவிர்க்க முடியாதது

ஒரு புதிய அரசியல் அந்தஸ்து கோரி போராட்டம் நடத்தும் தமிழர்கள் இன்று சமூக மாற்றம் நிகழ்வதை உணர வேண்டும்.

தமிழ் மக்கள் தம்மத்தியில் நிலவும் சாதி ரீதியான அசமத்துவம், பெண்களுக்கு எதிரான அநீதி ஆகியவற்றுக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு பேராசிரியர் சிவத்தம்பி கூறினார்.

பேராசிரியர் கு. நேசையா கூறியதாவது;–

இலங்கையில் நிகழும் மனித உரிமை மீறல் கணக்கிலடங்கா. மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளரின் வாக்குரிமை பறிக்கப்பட்டது மனித உரிமை மீறல் அல்லவா ?

ஆறுவது திருத்தச் ஷரத்து மூலம் இந்த நாட்டுத் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் பறிக்கப்பட்டு மக்கள் உரிமை மீறப்பட்டுள்ளது.

நாற்பதுகளிலே சிறப்பாக இயங்கிய கூட்டுறவு இயக்கத்தின் இருபது லட்சம் உறுப்பினர்களின் சுதந்திரத்தைப் பறித்தது மனித உரிமை மீறல் அல்லவா?

எமது பிரதேசங்களுக்கும் இந்த நாட்டுக்கும் வெளியூர் செய்தியாளர்களை வர அனுமதி மறுப்பது மனித உரிமை மீறல் அல்லவா? இவற்றை எதிர்த்து நாம் குரல் கொடுத்தல் அவசியம்.

இவ்வாறு பேராசிரியர் நேசையா கூறினார்.

மனித உரிமை மீறல்களை சித்திரிக்கும் படங்களின் கண்காட்சியும் கருத்தரங்கில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

மனித உரிமை மீறல்களைக் கண்டிக்கும் சுலோக அட்டைகளும் காணப்பட்டன.

"பெண்களுக்கு எதிரான பலாத்காரம் என்பது வன்செயலின் மோசமான வடிவமே. இதைப் பெண்கள் தனிப்பட்ட அவமானமாகவோ, ஒழுக்கக் கேடாகவோ கருதாமல்' இந்த அநீதிகளை, அநியாயங்களை பகிரங்கப்படுத்த வேண்டும்.

இவ்வாறும் ஒரு சுலோக அட்டை வைக்கப்பட்டு இருந்தது.

### மலையகத்தில்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த செவ்வாய் இரவு இடம் பெற்றது. தொழிலாளருக்கு வழங்குவதற்காக கொண்டு வரப்பட்ட ஆறு லட்சம் ரூபா பணமே இச்சம்பவத்தில் கொள்ளையிடப்பட்டது.

வான் ஒன்றில் வந்த ஆயுதந்தாங்கிய 5 பேர் கொண்ட கோஷ்டியே இக்கொள்ளையை நடத்தியது.

மூன்றாவது சம்பவம் அவிசாவலைத் தோட்டம் ஒன்றில் நடந்தது.

தொழிலாளருக்கு வழங்குவதற்காக தோட்டத்துரை கொண்டு வந்த 40,000 ரூபா சம்பளப் பணம் இனந் தெரியாத கோஷ்டி ஒன்றினால் அபகரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அவர்கள்....

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வீதி வழியே வந்து கொண்டு இருந்த 14 வயதுச்சிறுமி கமலேஸ்வரி துரைராசாவுக்கும் 7 வயதுச் சிறுவன் பாலச்சந்திரன் சந்திரதாஸனுக்கும் துப்பாக்கிச் சூடுகள் விழுந்தன.

இரண்டு பேரும் தற்பொழுது திருமலை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அன்புவழிபுரம் பகுதி மக்கள் பகலிலும் இப்பொழுது அச்சத்துடன் வாழ வேண்டியதாயுள்ளது.

### சிறப்பு....

(3 ஆம் பக்க தொடர்ச்சி)

முறைமை தற்காப்புக்காகவே இருந்தது. இப்போது நடக்கும் ஒப்பந்தங்களுக்கும் உடன்படிக்கைகளுக்கும் அன்று நடந்த ஹுதைபியா உடன்படிக்கை வழிகாட்டியாகத் திகழ்கின்றது.

அண்ணலவர்கள் ஒரு வழிகாட்டி; சிறந்ததலைவர்; அவருக்கு நிகர் அவரே. இத்துணைசிறப்பு மிக்க அண்ணலவர்களின் வாழ்வு முறை எமது சந்ததிகளுக்கு என்றும் கலங்கரைவிளக்கமாக அமைந்திருக்கின்றது.

**3ஆம் பிரிவு**
**86 A/L**
**DAY CLASS**
ஆரம்பம்:
**16 - 12 - 85 காலை 11 மணி**
(எமது வழமையான ஆசிரியர் குழுவினால்)

**3ஆம் பிரிவு**
**86 A/L**
**WEEKEND CLASS**
ஆரம்பம்: 15 - 12 - 85

9.30 - 10.30 - விலங்கியல் - திரு. நாகநாதன்
10.30 - 11.30 - தாவரவியல் - திரு. குகாதரன்
11.30 - 12.30 - இரசாயனவியல் - திரு. தில்லைநாதன்
12.30 - 1.30 - பௌதிகவியல் - திரு. வர்ணம்
1.30 - 3.30 - தூய, பிரயோக கணிதம் - திரு. நல்லையா

(சுருக்கமான முறையில் முழுப் பாடப் பகுதிகளும் நிறைவாக்கப்படும்.)

**PAPER CLASS**
1ஆம் பிரிவு
ஆரம்பம்: 22 - 12 - 85
ஞாயிறு நண்பகல் 12.00 மணி

விபரங்களுக்கு:
**NEW MASTER INSTITUTE**
BMC Lane, JAFFNA.

**மத்திய கிழக்கு நாடுகளில் (DOHA) வேலை வாய்ப்புக்கள்!**

பொதுப் பணியாளர்கள் உடன் தேவைப்படுகின்றனர்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

**LIBRAS LTD**
**லிப்ருஸ் லிமிட்டெட்**

R. G. கட்டடம்,
72, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

மற்றும்

60, Sea Beach Road,
PETTAH,
T' Phone: 29148

★ மேற்கு ஜெர்மனி ★ பிரான்ஸ் ★ இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு எமது பிரதிநிதி இம்மாதம் 26ஆம் திகதி உங்களைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்வார்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட், 207 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2-ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியீடு: திகதி: 13-12-1985